
புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | அக்டோபர் 31, 2019 | புரட்சி 18 | முழக்கம் 42 | விலை: ரூ.3.00


# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டி

# சீமான் கைதட்டலுக்காகப் பேசுகிறார்

***விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பிரச்சாரத்தின்போது நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், இராஜீவ் காந்தி கொலை குறித்து பேசியது, பெரும் சர்ச்சைக்குள்ளானது. இது குறித்து, ஜூனியர் விகடனுக்கு 19.10.2019 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்த பேட்டி.***

*“ஆமாம், நாங்கதான் ராஜீவ் காந்தியைக் கொன்றோம். இந்திய இராணுவத்தை அமைதிப் படை என்ற பெயரில் அனுப்பி, தமிழின மக்களை அழித்தொழித்த தமிழின துரோகி ராஜீவ் காந்தியை, தமிழ் மண்ணிலேயே கொன்று புதைத்தோம் என வரலாறு எழுதப்படும்” - நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் இந்தக் கடும் சர்ச்சைப் பேச்சுதான் தமிழக... ஏன் இந்திய அரசியலில் ஹாட் டாபிக். தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்த வரும், சீமானின் அரசியல் முகம் அறியாத கால கட்டத்திலேயே தனது இயக்கத்தின் கூட்டங்களில் மேடையேற்றிப் பேச வைத்தவருமான திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் இது தொடர்பாக சில கேள்விகளை முன் வைத்தோம்.*

**உங்களுக்கும் சீமானுக்குமான தொடர்பு எப்படி உருவானது?**

*“திரைப்பட வாய்ப்பு தேடி கிராமங்களிலிருந்து புறப்பட்டுவரும் பலருக்கும் அடைக்கலம் கொடுப்பார் கவிஞர் அறிவுமதி. அப்படி வந்தவர்தான் சீமான். 2001ஆம் ஆண்டு, தந்தை பெரியார் திராவிடர் கழகத் தொடக்க விழா மாநாடு சென்னையில் நடத்தினோம். அதில் பேச, அறிவுமதி வருவதாக இருந்தது. ஆனால், அவரால் வர இயலவில்லை. சீமானை அனுப்பிவைத்தார். மேடை ஏறிய சீமான், பெரியாரிய கொள்கைகளைத் திறம்படப் பேசினார். நட்பு உருவானது. தொடர்ந்து அவரை மேடை ஏற்றினோம்.*

**விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் சீமானுக்கும் நேரடி தொடர்பு இருந்ததா?**

*அப்படி இருந்ததாகத் தெரியவில்லை. 2008இல் விடுதலைப்புலிகளின் ஊடகவியல் பிரிவு சார்பில் திரைப்படம் எடுப்பதற்கு தொழில் நுட்பம் தெரிந்த ஓர் இயக்குநர் வேண்டும் என என்னிடம் கேட்டார்கள். சீமானைப் பரிந்துரைத்தேன். அதேபோல, விடுதலைச் சிறுத்தைகளின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசிடமும் கேட்டிருக்கிறார்கள். அவரும் சீமானையே பரிந்துரைத்துள்ளார். அதையடுத்தே விடுதலைப்புலிகள் ஊடகவியல் பிரிவினருக்குப் பயிற்சியளிக்க ஈழத்துக்குச் சென்றார் சீமான். 10 நாள் பயிற்சி முடிந்து திரும்பி வரும்போது, ஊடகவியல் பொறுப்பாளர் சேரலாதனிடம் ‘நான் பிரபாகரனைப் பார்க்க வேண்டும்’ என வற்புறுத்தியுள்ளார்.*

*அன்றைய தினம், புலிகளின் இராணுவக் கல்லூரி பட்டமளிப்பு விழா. அதற்காகத் தலைவர் பிரபாகரன் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது சீமான் சந்தித்துள்ளார். சீமான் நுழைவாயிலில் சென்று வெளி வருவதற்கு 12 நிமிடம் தரப்பட்டது. பலகட்ட சோதனைகளுக்குப் பிறகே தலைவரைச் சந்திக்க முடியும். இதை வைத்துப் பார்த்தால், நான்கு நிமிடங்களுக்குமேல் அவர் தலைவருடன் கழித்திருக்க வாய்ப்பில்லை. புகைப்படம் மட்டுமே எடுத்திருக்க முடியும். அதனால், “தலைவருடன் ஆமைக்கறி தின்றேன்; போர்க் கப்பலில் அரிசி மூட்டையில் தலைவரோடு அமர்ந்து போர்ப் பயிற்சி எடுத்தேன்” என்று சீமான் சொல்வதெல்லாம் நம்பும்படியாக இல்லை.*

**திராவிட இயக்கங்களை கடுமையாக விமர்சனம் செய்கிறாரே சீமான்?**

திராவிட இயக்கங்களுடன் முரண்படுவதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை, அவர் இதுவரை சொல்லவில்லை. ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, ஈழத் தமிழர்கள் விஷயத்தில் உண்மையாகச் செயல்படக் கூடியவர். ஈழத்தமிழர்கள் மத்தியில் அவருக்கு செல்வாக்கு இருக்கிறது. அதை, சீமானால் ஜீரணிக்க முடியவில்லை. அவரை ஈழத்தமிழர்களிடமிருந்தும், தமிழக தமிழர்களிடமிருந்தும் பிரிப்பதற்காக திராவிட எதிர்ப்பு ஆயுதத்தைத் தூக்கியிருக்கலாம் என்று கருதுகிறேன்.

**சீமான், ‘நாங்கள்தான் ராஜீவ் காந்தியைக் கொன்றோம்’ என்று பேசியிருப்பது...**

தற்போது இதைப் பேசியிருப்பது தேவையற்றது. மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு, மாநிலக் கட்சிகளே இல்லாமல் அழித்தொழிக்கும் வேலையைச் செய்கிறது; வரலாற்றைத் திரிக்கிறது. புதிய கல்விக் கொள்கையைப் புகுத்துகிறது. மொழியை அழித்து இந்தி திணிப்பு செய்கிறது. இந்தத் தருணத்தில் அதிகாரமற்ற காங்கிரஸை எதிர்க்க வேண்டிய தேவை என்ன இருக்கிறது? சீமான் ஒரு விளம்பர விரும்பி. கைத்தட்டலுக்காக இப்படிப் பேசுகிறார்.

**சீமான் பேச்சால் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் எழுவர் விடுதலையில் பாதிப்பு ஏற்படுமா?**

ராஜீவ் காந்தியின் மனைவியும் மகனும் ‘சட்டப்படி விடுதலை செய்வதில், எங்களுக்கு எந்த ஓர் ஆட்சேபனையும் இல்லை’ என்று சொல்லிய பிறகும், நீதிமன்றம் அதற்கு ஒப்புதல் அளித்தும் பா.ஜ.க அரசு அவர்களை விடுதலை செய்யவில்லை. ஆகையால், சீமான் பேச்சால் பெரிய பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை. ஆனாலும் தமிழ்நாட்டில் இருந்துகொண்டு இப்படிப் பேசியிருப்பது சரியல்ல. தற்போது மதுரை உயர் நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகளுக்குத் தடை நீட்டிப்பு தீர்ப்பாயம் வரும் சூழ்நிலையில் அதற்கும் இடையூறு ஏற்படலாம்.

**உண்மையில் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்களா?**

தலைவர் பிரபாகரன், ‘அது ஒரு துன்பியல் சம்பவம்’ என்று சொன்னார். ‘துன்பியல் சம்பவம்’ என்றதற்காக ராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகள் தான் கொன்றார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அவர்களின் பிரதிநிதிகள் சொன்னால் ஏற்றுக் கொள்ளலாம். ●

– புரட்சிப் பெரியார் முழக்கம் 31.10.2019

## திருக்குறள் மாநாடு விளக்கப் பொதுக்கூட்டம்




தந்தை பெரியாரின் 141 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 16.10.2019 அன்று மாலை 5 மணிக்கு அம்பத்தூர் ஓ.டி முருகன் கோவில் அருகில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக, பெரியாரின் 141ஆவது பிறந்தநாள் விழா – திருக்குறள் மாநாட்டு விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு, தமிழர் விடுதலைக் கழக ஒருங்கிணைப்பாளர், சௌ.சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். இல.குமார் வரவேற்புரையாற்றினார். அதைத் தொடர்ந்து, அ.சி.சின்னப்பத் தமிழர் (தமிழ்வழிக் கல்வி இயக்கம்), ஆவடி நாகராசன் ( தந்தை பெரியார் திராவிடர் கழகம்), சிவ செந்தமிழ்வாணன் (தமிழ் தேசக் குடியரசு இயக்கம்), க.சூரியா (திராவிட இயக்கத் தமிழர் பேரவை), என்.கே.மூர்த்தி (டாக்டர் கலைஞர் பத்திரிக்கையாளர் சங்கம்), கார்வேந்தன் (திராவிடர் கழகம்), குடந்தை அரசன் (விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி), திருமுருகன் காந்தி (மே 17 இயக்கம்), பொழிலன் (தமிழக மக்கள் முன்னணி), கொளத்தூர் மணி (திராவிடர் விடுதலைக் கழகம்) ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியாக பூ.இராமலிங்கம், (திராவிடர் கழகம்) நன்றி கூறினார்.

# இந்தியாவில் ஆயுதப் போராட்டம் வழியாக ‘இந்துராஷ்டிரம்’ அமைக்கத் துடித்தவர் ஹெட்கேவர்

***ஹெட்கேவர் வாழ்க்கை வரலாற்று விவகாரங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தால், அது ஆர்.எஸ்.எஸ். பண்பாட்டைப் பிரதி பலிக்கும் என்பதால், நாமும் அந்த ஆராய்ச்சியில் சற்று ஆழமாக நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம்.***

*மெட்ரிகுலேஷன் தேர்வை நாக்பூரில் முடித்து விட்டு மருத்துவப் படிப்பு படிக்க கல்கத்தா போகிறார்! இந்து வெறியரான மூஞ்சே என்ற பார்ப்பனர்தான் அவருக்கு உதவிபுரிகிறார். வன்முறை இயக்கங்களில் மிகவும் ஈர்க்கப்பட்ட ஹெட்கேவர், கல்கத்தாவில் போய் படித்தால், இத்தகைய அமைப்புகளோடு தொடர்பு கொள்ள முடியும் என்று விரும்பினார். ஞானத் தந்தைகளாக அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் திலகரும், சிவாஜியும்தான். 1910ஆம் ஆண்டிலிருந்து 1915ஆம் ஆண்டுவரை கல்கத்தாவில் மருத்துவக்கல்வி பயின்ற இவர் தங்கிய விடுதி அப்போது மாணவர்களின் அரசியல் அரங்கங் களாக செயல்பட்டன. பல வன்முறை இயக்கங்கள், புரட்சி இயக்கங்களைச் சார்ந்தவர் களும் அங்கு வருவது உண்டு.*

*இந்த கல்கத்தா வாழ்க்கைப்பற்றி, ஹெட்கேவரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும். ஆர்.எஸ்.எஸ்.சின் அதிகாரப்பூர்வமானதும், சி.பி.பிஷிகார் என்பவரால் எழுதப்பட்டதுமான நூல் (பக் 13) கீழ்க்கண்டவாறு கூறுகிறது.*

*“கல்கத்தாவுக்குச் சென்றவுடன் ஹெட்கேவர் ‘அனுசிஹிலன் சமிதி’ என்ற அமைப்பின் நெருக்கமான உறுப்பினராக சேர்ந்துக் கொள்ளப் பட்டார். ஆபத்துக்கள் நிறைந்த பல முக்கியமான இரகசிய வேலைகள் அவருக்குத் தரப்பட்டது. புரட்சியாளர் களுக்கு பயங்கரமான ஆயுதங்களை இரகசியமாக கொண்டு சென்றார்” என்று கல்கத்தா போன உடனேயே இவர் புரட்சிக்காரராக மாறிவிட்டதுபோல், ஒரு தோற்றத்தைத் தந்து எழுதியிருக்கிறார்கள். ஆனால், உண்மை என்னவென்றால் அது வேறாக இருக்கிறது!*

*ஜே.ஏ. குர்ரன்* (J.A.Curran) *எழுதிய* "Militant Hinduism in Indian Politics" *நூலில் (பக்கம் 13இல்) உண்மையை உடைத்துக் காட்டுகிறார்!*

*“கல்கத்தாவுக்கு ஹெட்கேவர் போனவுடன், புரட்சி இயக்கங்கள் அவருக்கு முக்கியத்துவம் எதுவும் தரவில்லை. கல்கத்தாவில் வாழ்ந்த காலத்தில், அவர் சிறைக்குச் சென்றதாக எந்த ஆதாரமும் கிடையாது. ஆனால் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பிரிட்டிஷார் அவரை போலீஸ் காவலில் வைத்திருந்தார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கும் எந்த ஆதாரமும் கிடையாது” - என்று ஹெட்கேவரின் ‘புரட்சி வாழ்க்கை’யின் புரட்டுகளை அம்பலப்படுத்திக் காட்டுகிறார்.*

*ஆபத்து தரக்கூடிய பல இரகசிய வேலைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று கூறுகிறார்களே தவிர, எந்த வேலையைச் செய்தார்? எங்கே தூது போனார்? எந்த ஆயுதத்தை எடுத்துக் கொண்டு போனார்? என்பதற்கான விளக்கங்கள் எதையுமே ஆர்.எஸ்.எஸ். காரர்கள் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை!*

*கல்கத்தாவிலே சிறைச்சாலையிலே அடைக்கப் பட்டார் என்று அப்பட்டமான ஒரு பொய்ப் பிரச்சாரம் செய்வதற்கும் அவர்கள் கூச்சப்பட வில்லை’ ஹெட்கேவர் வாழ்க்கை வரலாறும் ஆர்.எஸ்.எஸ்.வரலாறும் ஒன்றே என்கிறார்கள். இந்த ‘சத்தியகீர்த்திகள்’. ஆனால், இந்த ‘உத்தமப் புத்திரர்’களின் கதைகள் பொய்மை மூட்டைகளாக விளங்குகின்றன.*

*கல்கத்தாவில், மருத்துவ டிப்ளமோ படிப்பை முடித்துவிட்டு ஹெட்கேவர் நாக்பூர் திரும்புகிறார்! அப்போது முதலாம் உலக மகாயுத்தம் துவங்கி விட்டது. யுத்தத்தில் இங்கிலாந்தும் சம்பந்தப்படு கிறது! அந்த யுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உள்நாட்டிலே ஆயுதம் தாங்கிய புரட்சியை உருவாக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.*

*முதலாம் உலக மகா யுத்தம் துவங்கியபோது, ஜெர்மன் மொழியைப் படிக்க ஆரம்பித்தவர்கள் இந்த நாட்டு பார்ப்பனர்கள்! காரணம், ஜெர்மன்காரர்கள் கையில் இந்திய ஆட்சி வந்துவிடும் என்று நம்பி, அந்த ஆட்சியிலே தங்கள் செல்வாக்கைப் பெற்று விடலாம் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கிடந்தனர்!*

*ஜெர்மன் பாசிச இயக்கத் தலைவர் ஹிட்லர் மீது ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு எப்போதுமே மரியாதை உண்டு. ஹிட்லரின் ஸ்வஸ்திக் கொடி அமைப்பையே, தங்கள் கொடியாக வைத்துக் கொண்டிருந்ததுதான் இந்த ஆர்.எஸ்.எஸ்.!*

*“இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்பு ஆர்.எஸ்.எஸ். காரர்களுக்கு ஹிட்லர்தான் குரு. காந்தியாருக்கு எதிராக வெறுப்புணர்ச்சியை இவர்கள் பரப்பி வந்தார்கள். சுதந்திரப் போராட்ட உணர்வுகள், மதச்சார்பின்மை ஆகியவற்றை எதிர்த்து பிரச்சாரம் செய்து வந்தனர். ஜனநாயகத்தை அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். அது மேற்கத்திய நாடுகளின் இறக்குமதி என்றார்கள். அதே அளவுக்கு சோஷலிசத்தின் மீதும் அவர்களுக்கு வெறுப்பு உண்டு. காரணம், சோஷலிசம் இந்து கலாச்சாரத்துக்கு எதிரானது என்று அவர்கள் உணர்ந்தார்கள். காந்தியாரை ஒரு தலைவராகவே அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.*

*1965ஆம் ஆண்டில்தான், மிகவும் சிரமத்தோடு வேறு வழியின்றி தங்களின் அன்றாடப் பிரார்த்தனையில் காந்தியார் பெயரையும் சேர்த்துக் கொண்டனர்.”*

*நாம் மேலே எடுத்துக் காட்டியிருப்பது - மதுலிமாயி அவர்கள். ‘சண்டே’ பத்திரிக்கைக்கு அளித்த பேட்டி யாகும். (10.6.1979 சண்டே இதழ்) இந்தப் பின்னணியில் முதலாவது உலக மகாயுத்தத்தைப் பயன்படுத்தி, உள்நாட்டில் ஆயுதப் புரட்சி நடத்திட, இவர் போட்ட*



**ஹெட்கேவர் சுதந்திரப் போராட்ட வீரர் என்று பா.ஜ.க.வினர் பேசுவது உண்மைகளைத் திரிப்பதாகும்.**

*திட்டத்தின் நோக்கம் என்ன?*

*ஹெட்கேவர், தனது இந்தத் திட்டம் பற்றி, இவரின் ஞானகுரு திலகரிடம் எடுத்துச் சொன்னபோது, அது நடைமுறைக்கு ஒவ்வாதது என்று புறக்கணித்துத் தள்ளிவிட்டார்; இதற்கு எந்த முக்கியத்துவமும் திலகர் கொடுக்கவில்லை. திலகர் ஆதரவு இல்லை என்றவுடன், ஹெட்கேவரின் வீரமும் குறைந்தது. (இந்தக் கருத்துக்களை ‘பிஷிகார்’ தமது ‘சங்நிர்மதா’ நூல் பக்கம் 13-ல் விளக்குகிறார்.)*

*“நாக்பூருக்கு திரும்பிய ஹெட்கேவர், இந்து மகாசபையில் தான் சேர்ந்து விட்டதாகவும், அந்த அமைப்புக்குத் தேவையான நூல்கள், வெளியீடு களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும், அவரே தனது நண்பர்களிடம் கூறுகிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தோற்றத் துக்கான எண்ண ஓட்டங்கள் இந்தக் காலத்தில்தான் அவருக்கு உருவானது.”*

*“அந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சியிலும் இந்து மகா சபையிலும் ஒரே நேரத்தில், வேலை செய்கிறார்! ‘ராஷ்டிரிய உத்சவ மண்டல்’ என்ற அமைப்பிலும் தீவிரமாகப் பங்கெடுத்தார்.*

*‘அக்ஹதா’ என்ற மாணவர் அமைப்பிலும், பொதுக் கூட்டங்கள், மாநாடுகளிலும் பங்கெடுத்துக் கொண்டார்” என்ற தகவல்களை பிஷிகார் தமது நூலில் குறிப்பிடுகிறார். இவர் அப்போது தீவிரமாகப் பங்கெடுத்த ‘ராஷ்டிரிய உத்சவ மண்டல்’ என்ற அமைப்பு ஒரு வன்முறை அமைப்பாகும்.*

*இந்த வகுப்பு வெறிக் கும்பல் மகாராஷ்டிர மாநிலத் தில் பிவாண்டி என்ற இடத்தில் மிகப் பெரிய வகுப்புக் கலவரத்தைத் தூண்டிவிட்டு நடத்தி, விசாரணைக் கமிஷனால் குற்றம் சாட்டப்பட்ட ஒரு அமைப்பு.*

*ஒரே நேரத்தில் இந்து மகாசபையிலும் காங்கிரஸ் கட்சியிலும் சேர்ந்து இரட்டை உறுப்பினராக பணியாற்றும்முறை அப்போது இருந்தது! பின்னர் அது ஒரு பிரச்சனையாக வெடித்துக் கிளம்பியபோதுதான் 1934ஆம் ஆண்டு அதில் இந்திய காங்கிரஸ் ‘இரட்டை உறுப்பினர்’ முறையை தீர்மானம் நிறைவேற்றி தடை போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.*

*‘மூத்த தலைவர்கள் பலருடன் ஹெட்கேவர் தொடர்பு கொண்டிருந்தாலும் ஒருவர்கூட இவரின் ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கு ஆதரவு தரத் தயாராக இல்லை’ என்று எழுதுகிறார் ‘பிஷிகார்’ தனது நூலில் (பக்-27)*

*இந்து மத வெறியர்களில் ஒருவராக இருந்த டாக்டர் ‘மூஞ்சே’யோடுதான் இவர் மிகவும் நெருக்கமாக இருக் கிறார். தனது திட்டங்களுக்கு ஆதரவில்லாத நிலையில் 1920ஆம் ஆண்டு நாக்பூர் காங்கிரஸ் மாநாட்டுக்குச் செல்கிறார். காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தில் தனக்கு நம்பிக்கையில்லை என்று இவர் அறிவித்துக் கொண்டாலும் 1921ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுத்துக் கொள்கிறார்.*

*இதற்கான காரணம் என்ன என்பதை பிஷிகார் தனது நூலில் விளக்குகிறார்.*

*“பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து ஆயிரக்கணக் கானவர்கள் சிறைச்சாலைக்குப் போகும் நேரத்தில் நீ மட்டும் மறைந்துக் கொண்டிருக்கிறாயே... இது வெட்கக்கேடு அல்லவா? என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாதே என்ற காரணத்தால்தான் காந்தியாரின் இயக்கத்தில் தீவிரமாக பங்கெடுத்துக் கொண்டார்” என்று ‘பிஷிகார்’ தமது நூலில் பக்கம் 30இல் குறிப்பிடுகிறார்.*

*ஹெட்கேவர் மிகப் பெரிய தேசபக்தர் என்றும், காந்தியாரோடு சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத் தவர் என்றும் ஆர்.எஸ்.எஸ். வெளியீடுகள் அவரது பெருமையை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. அதையே காரணம் காட்டி, காந்தியார் கொலைக்கும் தங்கள் அமைப்புக்கும் சம்பந்தமே இல்லை என்று வாதாடுகின்றனர். இந்த வாதத்திலே நேர்மை இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் காந்தியார் இயக்கத்தின் எத்தகைய சூழ்நிலையில் அவர் பங்கேற்றார் என்பதை நாம் விளக்கியிருக்கிறோம்! இதற்கு ஆதாரமாக இன்னொரு வாக்குமூலத்தை யும் இங்கே தருகிறோம்.*

*மராட்டிய மாநிலத்தின் முதல் ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்தவர் ஜி.எம். ஹட்டர். அவர் ‘ஆர்.எஸ்.எஸ்.சும் நேதாஜியும்’ என்ற தலைப்பில் 7.10.79 ‘இல்லஸ்டிரேட்டட் வீக்லி’ இதழில் எழுதிய கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்...*

*“ஹெட்கேவர் காந்தியார் இயக்கத்தில் இருந்தார் என்பதும், சிறைக்குச் சென்றார் என்பதும் உண்மைதான். ஆனால், அதை வைத்துக் கொண்டு மக்கள் கிளர்ச்சியை விரும்பினார் என்று சொல்லிவிட முடியாது. காந்தி யாரின் திட்டத்தை ஆதரித்தார் என்றும் சொல்லிவிட முடியாது. மற்ற தேச பக்தர்களைப் போல் தனக்கும் மக்கள் இயக்கத்தில் நம்பிக்கை உண்டு என்று காட்டிக் கொள்வதற்கும், தானும் சிறைக்குப் போக அஞ்ச மாட் டேன் என்பதை விளம்பரப்படுத்திக் கொள்வதற்குமே அப்போது அவர் காந்தியார் இயக்கத்தில் பங்கேற்றார்” - என்று உறுதியாகக் குறிப்பிடுகிறார். கூறுபவர் ஆர்.எஸ்.எஸ் தலைவர்களிலேயே முக்கிய புள்ளி.*

*தானும் தேசபக்தர்தான் என்று நாட்டு மக்களிடம் காட்டிக் கொள்வதற்காக, காந்தியார் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டு சிறை சென்ற ஹெட்கேவர் 1922ஆம் ஆண்டு சிறையிலிருந்து வெளி வருகிறார். வெளியே வந்தவுடன் காந்தியாரைப் பற்றி கடுமையான எதிர்ப்புப் பிரச்சாரத்தில் இறங்குகிறார். முஸ்லீம்களுக்கு ஆதரவாகப் போகிறார் காந்தியார் என்ற வகுப்புவாதப் பிரச்சாரம் முடுக்கி விடப்படுகிறது. அதைத் தொடர்ந்து 1923ஆம் ஆண்டு நாக்பூரில், ஒரு பதட்டத்தை இவர்கள் உருவாக்குகிறார்கள்.*

*நாக்பூரிலே மசூதியின் முன் ஊர்வலம் நடத்திட வேண்டும்; முஸ்லிம்கள் எதிர்ப்பார்கள்... அதை பயன்படுத்திக் கொண்டு, முஸ்லீம்களுக்கு எதிராக ஒரு கலவரத்தையே நடத்திக் காட்டவேண்டும் என்று திட்டமிட்டார் ஹெட்கேவர்!*

*இந்தப் பிரச்சனையில் சமாதான உடன்படிக்கை எதையும் ஏற்கக்கூடாது; இந்துக்களின் உரிமையை நிலை நாட்டிக் காட்டவேண்டும் என்று சவால் விட்டு, வேலைகளை ஆரம்பித்தார். டாக்டர் மூஞ்சே (ஆர்.எஸ்.எஸ்.சை தொடங்கியவர் களில் ஒருவர்), ஹெட்கேவர் இருவருமே முன்னின்று இதை நடத்தினார்கள். ஒலிபெருக்கிகள் முழங்க முஸ்லீம்களை இழிவு படுத்திக் கோஷம் போட்டுக் கொண்டு, அவர்களை வன்முறைக்கு அழைக்கும் ஊர்வலம் மசூதி வழியாக சென்றது; ஆனால், இந்த மதவெறிக் கும்பலின் ஆசையில் மண் விழுந்துவிட்டது.*

*முஸ்லீம்கள் எவரும் ஆத்திரப்படாமல் அமைதி காத்தனர். ஊர்வலம் அமைதியாக சென்றுவிட்டது. ஆனால், இதை மிகப் பெரிய முதல் வெற்றி என்று அவர்கள் பறை சாற்றிக் கொள்ள ஆரம்பித்தனர்! இந்த சம்பவம் நடந்தது 1923ஆம் ஆண்டு!*

*அதே ஆண்டு, உடல் பயிற்சி அமைப்பு ஒன்றை துவக்குகிறார் ஹெட்கேவர்! அதற்குப் பெயர் ‘மஹாராஷ்டிரா வியாயம் ஷாலா’. அத்துடன் தொண்டர் படை ஒன்றையும் ஏற்படுத்துகிறார். அதற்குப் பெயர் ‘ராஷ்டிரியம் சேவக் மண்டல்’. இவைகள் எல்லாம் 1925ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கான முன்னோடி நிகழ்ச்சிகள்.*

*முஸ்லீம்களை கலவரத்துக்கு அழைக்கிறார்; உடற்பயிற்சி அமைப்பை உருவாக்குகிறார்; தொண்டர் படை அமைக்கிறார். அதைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ்.சை உருவாக்குகிறார் என்பதிலிருந்தே, வன்முறைக் கலவரத்தை திட்டமிட்டு நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அமைப்பு உருவெடுத்தது என்பது விளங்குகிறது அல்லவா? ஹெட்கேவரைப் பொறுத்தவரை அவர் மூளை பலம் என்பதைவிட, உடல் பலத்திலேதான் நம்பிக்கைக் கொண்டிருந்தார்.*

*குத்து விளையாட்டுகளும் குஸ்தியும் தெரிந்த - இந்த உடல்கட்டு மிக்க மனிதர். ஒரு சிந்தனையாளராக விளங்கினார் என்பதற்கு ஆதாரங்கள் கிடையாது; ஆனால், ஆர்.எஸ்.எஸ் வெளியீடுகள் எல்லாம் இல்லாத பெருமைச் சுமைகளை எல்லாம் இந்த மனிதரின் தலைமீது தூக்கி வைத்து, இவரை ஒரு மிகப் பெரிய சிந்தனையாளராக சித்தரித்துக் காட்டுகின்றன. ஆனால், அவைகள் உண்மைக் கலப்பில்லாத பொய்கள்; புனையப் பட்ட புனைந்துரைகள் என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்களைக் கொண்டு நம்மால் விளக்க முடியும்!*

*‘ஹெட்கேவர், அந்தக் காலத்தில் குறிப்பிடத்தகுந்த புரட்சியாளர்களில் ஒருவர். கல்கத்தாவில் மாணவராக இருந்தபோதே புரட்சிகர அமைப்புகளில் பங்கு கொண்டவர். அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சியில் தீவிரமான உறுப்பினர்’ - என்று ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கூறுகிறார்கள். (நாக்பூர் நீதிமன்றத்தில் தேவரஸ், ராஜேந்திரசிங் ஆகியோர் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் 8ஆவது பாராவைத்தான் மேலே எடுத்துக் காட்டியிருக்கிறோம்.)*

*கல்கத்தாவில் எந்தப் புரட்சி இயக்கத்தில், என்ன பங்கேற்றார் என்பதற்கு எந்த ஆதாரமும் சொல்லப்பட வில்லை. இவர் காங்கிரஸ் கட்சியிலேயே தீவிரமாகப் பங்கு கொண்டவர் என்ற வாதத்திலும் நேர்மை இல்லை; நாணயம் இல்லை.*

*இவருக்கு ‘குரு’வாக இருந்து, இவரை உயர்த்தி விட்டவர் டாக்டர் மூஞ்சே! ஆனால், ஆர்.எஸ்.எஸ். வெளியீடுகளில் ஹெட்கேவருக்கு, இவர் மெய்ப் பாதுகாவலராக இருந்தார் என்று எழுதுகிறார்கள்! இவருக்கு ‘இந்து ராஷ்டிரம்’ என்ற தத்துவத்தை எடுத்துச் சொன்ன ‘வீர சவர்க்கார்’ பற்றி இவர்கள் வெளியீடுகளில் எந்தக் குறிப்பும் தரப்படவில்லை. பாய்பரமனானந்த் என்பவர்தான் வட இந்தியாவில், குறிப்பாக சிந்த், பஞ்சாப், டில்லி பகுதிகளில் இந்த ஆர்.எஸ்.எஸ்.சை வளர்த்தவர். ஆனால், எல்லா இடங்களிலும் ‘குருஜீ’யின் செல்வாக்கால்தான் வளர்ந்தது என்பதைக் காட்டுவதற்காக, இவரின் பெயரையே இருட்டடிப்பு செய்து விட்டார்கள்.*

*ஹெட்கேவர் நூலகங்களில் படித்தார்; சிந்தித்தார் என்பதற்கு ஆதாரங்களே இல்லை; வைதீகப் பார்ப்பனர் பரம்பரையில் வந்த அவருக்கு, பார்ப்பன வர்ணாஸ்ரம வெறித் தனத்தை வன்முறை மூலம் பரப்பிட வேண்டும் என்ற துடிப்பு இருந்திருக்கிறதே தவிர சிந்தனை வளம் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த ஒரு தாழ்வு மனப்பான்மை அவர்களையே உறுத்திக் கொண்டிருக் கிறது! எனவே அதன் வெளிப்பாடுகளை - அவர்கள் நூல் முழுதும் பார்க்க முடிகிறது.*

**ஆதாரம்: ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம் நூல்**

*இத்தகைய வரலாற்றுப் பின்னணி கொண்ட ஹெட்கேவரை சுதந்திரப் போராட்ட தியாகி என்றும் ஆர்.எஸ்.எஸ். சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்தது என்றும் பா.ஜ.க.வின் ஊடகங்களில் பேசி வருகிறார்கள்.*

# வழிபாடுகளில் மக்கள் தீவிரம் காட்டவில்லை

# சங்ககால தமிழர் வாழ்வை உறுதிப்படுத்துகிறது கீழடி ஆய்வு

***கீழடி அகழாய்வு முடிவுகள் குறித்த விவாதங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. இந்த நிலையில், சென்னை ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ள சிந்துவெளி மையத்தின் கௌரவ ஆலோசகரும் சிந்துவெளி தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டு வருபவருமான ஆர். பாலகிருஷ்ணனிடம் கீழடி ஆய்வு முடிவுகளின் முக்கியத்துவம் குறித்து பிபிசியின் செய்தியாளர் முரளிதரன் காசி விஸ்வநாதன் பேசினார். அவரது பேட்டியிலிருந்து:***

***கீழடி முடிவுகள் பரபரப்பாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. தற்போது தமிழக அரசு வெளியிட் டிருக்கும் முடிவுகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?***

இப்படி பரபரப்பாக விவாதிக்கப்படுவதற்குக் காரணமே, சமீப காலமாக இம்மாதிரி அகழாய்வு முடிவுகள் எதுவும் வெளிவரவில்லை என்பதுதான். ஆதிச்ச நல்லூரில் 1904ல் அலெக்ஸாண்டர் ரீ ஆய்வு மேற்கொண்டதற்குப் பிறகு, மீண்டும் 2004இல்தான் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால், அதனுடைய விரிவான விளக்கங்கள் யாருக்கும் தெரிய வில்லை. ஆனால், கீழடி துவக்கத்திலிருந்தே பொதுமக்களின் கவனத்தை ஈர்த்திருப்பதால், இப்போது வெளியாகியிருக்கும் முடிவுகள் எல்லோரது கவனத்தையும் கவர்ந்திருக்கிறது.

2010ல் கோவையில் நடந்த செம்மொழி மாநாட்டில் ஐராவதம் மகாதேவன், அஸ்கோ பர்போலா முன்பாக நான் சிந்துவெளி தொடர்பாக ஒரு ஆய்வுக்கட்டுரையை முன்வைத்தேன். கொற்கை - வஞ்சி - தொண்டி போன்ற தமிழகத்தில் உள்ள இடப்பெயர்கள், சிந்துவெளிப் பகுதியில் அடையாளம் தெரியாத இடப்பெயர்களாக இப்போதும் இருப்பதைக் கண்டறிந்து, என்னுடைய ஆய்வை அப்போது முன்வைத்தேன். அஸ்கோ பர்போலா, சங்காலியா, ஐராவதம் மகாதேவன், சவுத்வர்த் ஆகிய அறிஞர்கள் ஏற்கனவே இடப்பெயர்களை வைத்து சிந்துவெளி ஆய்வுகளை நடத்த முடியும் எனக் கூறியவர்கள்தான். அதைத்தான் நானும் பின்பற்றினேன். அப்போதுதான் கொற்கை - வஞ்சி - தொண்டி இடப்பெயர்கள் இருந்தன. ஆனால், அப்போதும்கூட வெறும் இடப்பெயர் சார்ந்த ஒரு ஆய்வாகத்தான் இது இருந்ததே தவிர, அகழ்வாராய்ச்சி சார்ந்த ஆதாரம் ஏதும் இருந்திருக்கவில்லை. அம்மாதிரியான ஒரு ஆதாரத்தை கீழடி கொடுத்திருக்கிறது.

***கீழடியையும் சிந்து சமவெளி நாகரிகத்தையும் நீங்கள் எப்படி தொடர்புபடுத்துகிறீர்கள்?***

சிந்து சமவெளி நாகரீகத்தின் முதிர்ச்சியான காலகட்டம் கி.மு. 2500. அது நலிவடைய ஆரம்பிப்பது கி.மு.1900 காலகட்டத்தில். இப்போது கீழடியில் கிடைத்த தமிழி என்ற தமிழ் பிராமி எழுத்து கிட்டத்தட்ட கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. ஆதிச்ச நல்லூரில் செய்யப்பட்ட தெர்மோலுமிசென்ஸ் உள்ளிட்ட ஆய்வுகளில் அது கி.மு. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கண்டறியப் பட்டிருக்கிறது. நாம் சங்ககாலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என வரையறுக்கிறோம். அதிலிருந்து தான் தமிழகத்தில் வரலாற்றுக் காலம் துவங்குகிறது. இப்போது ஒரு கேள்வி நியாயமாகவே எழுகிறது. சிந்துச் சமவெளி நாகரிகம் நலிவடைந்தது கி.மு. 1,900ல். தமிழக வரலாற்றுக் காலம் கி.மு. 600ல் துவங்கு வதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் கி.மு. 1,900க்கும் கி.மு. 600க்கும் இடையில் சுமார் 1,300 ஆண்டுகால இடைவெளி இருக்கிறது. அதேபோல, மொஹஞ்சதாரோ - ஹரப்பா போல, குஜராத்தில் சிந்துவெளி நகரங்களாக தேசல்பூர், லோதல், தோலாவிரா ஆகிய இடங்கள் இருக்கின்றன. அதற்குத் தெற்கே மகாராஷ்டிராவில் தைமாபாத் என்ற இடம் இருக்கிறது. 1960களின் துவக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இடம்தான் சிந்துவெளி நாகரிகத்தின் தெற்கு எல்லையாகக் கருதப்பட்டது. அதற்குத் தெற்கே சிந்துவெளி தொடர்பாக எந்த இடமும் இதுவரை கண்டறியப்படவில்லை.

***சிந்துவெளி லட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்த இடம். அவர்கள் எங்கே போனார்கள் என்பது முக்கியமான கேள்வி. அந்த நாகரீகம் ஏன் அழிந்தது, எப்படி அழிந்தது என்ற விவாதம் இப்போது தேவை யில்லை. ஆனால், அங்கு வாழ்ந்தவர்கள் என்ன ஆனார்கள்?***

சிலர் அங்கேயே தங்கியிருந்திருப்பார்கள். சிலர் வேறு இடங்களுக்குப் போயிருப்பார்கள். வேறு மொழிகளைப் பேச ஆரம்பித்திருப்பார்கள். வேறு பண்பாடுகளைக் கடைப்பிடிக்க ஆரம்பித்திருப் பார்கள். அப்படி வெளியேறியவர்கள் அப்போதிருந்த அடையாளங் களைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பார்கள். அல்லது எடுத்துப் போயிருப்பார்கள். ஆனால், கட்டடங்களை அவர்களால் எடுத்துச் சென்றிருக்க முடியாது. நினைவுகளையும் பெயர்களையும்தான், குறிப்பாக இடப்பெயர்களை எடுத்துப்போயிருப்பார்கள். நம்பிக்கை கள், பண்பாட்டுக் கூறுகள் ஆகியவையும் மாறாமல் இருந்திருக்கும். இந்தியாவில் ஆராய்ச்சியைப் பொறுத்தவரை இரண்டு விஷயங்கள் புரியாத புதிராக இருக்கிறது. முதல் கேள்வி, சிந்து வெளி மக்கள்பேசிய மொழி என்ன, அவர்கள் யார், அவர்கள் நாகரிகம் எப்படி அழிந்தது? இரண்டாவது கேள்வி, இந்தியாவைப் பொறுத்தவரை அவ்வளவு முக்கியமான கேள்வி இல்லையென்றாலும் தமிழர்களுக்கு முக்கியமான கேள்வி.

**கீழடியிலும் சிந்துவெளியிலும் விளையாட்டுப் பொருள்கள் அதிகம் கிடைத்துள்ளன**

தமிழர்களுக்கு எப்போதுமே தம்முடைய தோற்றம், தாம் எங்கிருந்து வந்தோம் என்ற கேள்வி இருந்து கொண்டேயிருக்கிறது. சிலர் மத்திய தரைக்கடல் என்று சொல்வார்கள், சிலர் குமரிக் கண்டம், லெமூரியாக் கண்டம் என்று சொல்வார்கள். ஆனால், தோற்றம் குறித்து தமிழர்களிடம் ஒரு கூட்டு மனநிலை இருந்துகொண்டே இருக்கிறது. முதல் சங்கம், கடைச் சங்கம், கடற்கோள், அழிவு, புலம்பெயர்வு என தங்கள் தோற்றம் குறித்த கேள்வி அவர்களுக்கு இருந்துகொண்டே இருக்கிறது. சிந்துவெளி எப்படி அழிந்தது, தமிழர்கள் எங்கிருந்து வந்தார்கள் ஆகிய இரண்டு கேள்விகளுமே வெவ்வேறான, தொடர்பில்லாத கேள்விகளைப் போல இருக்கின்றன. ஆனால், என்னைப் பொறுத்தவரை இந்த இரண்டு கேள்விகளுமே ஒன்றோடு ஒன்று தொடர் புடையவை. ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். இதில் ஒரு புதிருக்கு தெளிவான விடை கிடைத்தால், இன்னொரு புதிருக்கும் விடை கிடைத்துவிடும்.

***இந்த ஆய்வு முடிவுகளை வைத்து, சங்க காலம் மூன்று நூற்றாண்டுகள் பின்னோக்கிச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு எப்படிச் சொல்ல முடியும்?***

நாம் வரலாற்றுக் காலம், வரலாற்றுக்கு முந்தைய காலம் எனப் பிரிப்பது எழுத்து தோன்றியதை வைத்துதான். எழுத்தின் தோற்றம்தான் இரண்டையும் பிரிக்கிறது. தமிழகத்தில் வரலாற்றின் துவக்க காலம் என்பது தமிழ் பிராமி என்ற தமிழி எழுத்துகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்ற கருதுகோள் இருந்தது. சங்க இலக்கியத்தையும் இந்த காலகட்டத்தைச் சேர்ந்ததாகத்தான் கருதினார்கள். ஆனால், இம்மாதிரி ஒரு இலக்கியம் எழுதப் படுவதற்குப் பின்னணியில் ஒரு சிறப்பான மரபு இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியத் தில் பல நூல்கள் மேற்கோள் காட்டப்படுகின்றன. அந்த நூல்கள் நமக்கு கிடைக்கவில்லை. ஒரு பெரிய இலக்கிய மரபு இருந்தால்தான் தொல்காப்பியம் போன்ற ஒரு நூலை எழுத முடியும். சங்க இலக்கியம்கூட திடீரெனத் தோன்ற முடியாது. சங்க இலக்கியத்தில் சொல்லப்படுவது நிகழ்காலப் பதிவுகள் அல்ல. கடையேழு வள்ளல்களைப் பற்றிப் பேசுகிறோம் என்றால், அவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்ததாக அர்த்தமல்ல. சமகாலப் பதிவாகவும் இருந்திருக்கலாம். அல்லது அதற்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்த நினைவு களாகவும் இருந்திருக்கலாம். ஆக, அந்த நிகழ்வுகளுக்கு, அது பற்றி இலக்கியத்திற்கு வயதை நிர்ணயிப்பது மிகக் கடினம். இப்போது கீழடியில் கிடைத்த பொருட்கள்,குறிப்பாக எழுத்துகள் கிடைத்த அதை படிவத்தில் கிடைத்த சில பொருட்கள் கரிம ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் வயது கி.மு.580 எனக் கண்டறியப்பட் டுள்ளது. ஆகவே எழுத்தறிவு இருந்த காலம் அல்லது சங்க காலம் என்பது கங்கைச் சமவெளியில் வரலாறு துவங்கிய காலத்திற்கு சமமாக இருக்கிறது.

சிந்து சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சியை இந்தியாவில் எந்த இலக்கியத்தில் அதிகமாக பார்த்தறிய முடியும் என்ற கேள்வியை முன்வைத்தால், அதாவது சிந்துவெளி தொடர்பான நினைவுகளைக் கொண்ட இலக்கியம் எங்கிருக்கிறது என்று பார்த்தால் சங்க இலக்கியத்தில்தான் இருக்கிறது. சங்க இலக்கியத்தைப் போல நகரங்களைக் கொண்டாடிய இலக்கியம் வேறு இல்லை. நகர வாழ்க்கை மட்டுமல்ல, ஒரு வகையான பல்லின மக்கள் சேர்ந்து வாழக்கூடிய ஒரு வாழ்க்கை, கடல் வணிக மரபு, தாய்த் தெய்வ வழிபாடு, விளையாட்டுக்கான முக்கியத்துவம் ஆகியவை அந்த நாகரீகத்தின் குணாதிசயங்களைக் குறிப்பிடும் குறியீடாக நம் முன் நிற்கின்றன. அப்படி சிந்துவெளிக்கென்று சில விஷயங்களை நாம் அடையாளமாகக் குறிப்பிட்டால், அந்த நான்கைந்து விஷயங்கள் காத்திரமாகப் பேசப்பட்டது சங்க இலக்கியத்தில்தான். அதற்குப் பிறகு இதுபோன்ற குணாதிசயங்களுடன் பொருட்கள் கிடைப்பது கீழடியில்தான். அதனால்தான் சிந்துச் சமவெளி - சங்க இலக்கியம் - கீழடி ஆகிய மூன்றையும் ஒரு புள்ளியில் இணைக்கிறோம்.

***கீழடியில் பெரும் எண்ணிக்கையில் பானை ஓடுகளில் கீறல்கள் கிடைத்திருக்கின்றன. 1001 பானை ஓடுகள் இப்படிக் கிடைத்திருக்கின்றன. இதற்கு என்ன முக்கியத்துவம்?***

எழுத்து வடிவத்தை எடுத்துக்கொண்டால், இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகப் பழைய எழுத்துவடிவம் சிந்துவெளி எழுத்துவடிவம்தான். சிந்துவெளி எழுத்துகளை இன்னும் நம்மால் படிக்க முடியவில்லை. பொதுவாக, படிக்க முடிந்த எழுத்துகளுக்கு அருகில், படித்தறிய முடியாத எழுத்துகள் கிடைத்தால், இதை வைத்து அதைப் படிக்க முடியும். சுமேரியாவில் அப்படித்தான் படிக்க முடிந்தது. ரொஸட்டா ஸ்டோன் என்ற இருமொழி கல்வெட்டின் உதவியுடன் அவை படிக்கப்பட்டன. ஆனால், சிந்துவெளியில் அப்படி ஒரு விஷயம் கிடைக்காததால், சிந்துவெளியைப் படிக்க முடியவில்லை. அதற்கடுத்து, அசோகன் பிராமியும் தமிழ் பிராமியும் கிடைத்திருக்கின்றன. இவற்றைப் படிக்க முடியும். இவை இரண்டுக்கும் நடுவில் ஒரு இணைப்புச் சங்கிலி இருந்திருக்க வேண்டும். அவைதான் பானையில் செய்யப்பட்ட கீறல்கள் (Graffiti markers). இந்தக் கிறுக்கல்கள் இரண்டுவிதமாக இருக்கும். பானையைச் செய்தவர் எழுதியிருப்பார். அது பானை ஈரமாக இருக்கும்போதே எழுதப்பட்டிருக்கும். வாங்கியவர் எழுதியிருந்தால், பானை சுடப்பட்ட பிறகு எழுதப்பட் டிருக்கும். கீழடியில் கிடைத்திருப்பது இரண்டாவது வகையைச் சேர்ந்தது. அப்படி எழுதக்கூடியவர்கள் நிறையப் பேர் இருந்திருக்க வேண்டும். அவர்கள் பெரிய அளவில் கற்றறிந்தவர்களாகவோ, புலவர்களாகவோ இருந்திருக்க வேண்டியதில்லை. சாதாரண மக்களாகவும் இருக்கலாம். இந்த பானைக் கீறல்களை சிந்துவெளி முத்திரைகளுக்கும் தமிழ் பிராமி எழுத்துகளுக்கும் இடையிலான ஒரு இணைப்புச் சங்கிலியாக நாம் பார்க்க முடியும். இந்தப் பானைக் கீறல்களில் சிந்துவெளியில் உள்ள கீறல்களைப் போன்ற கீறல்களும் சில பானை ஓடுகளில் கிடைத்திருக்கின்றன. ஆகவே அதன் தொடர்ச்சியாகவும் இதைப் பார்க்க முடியும். மேலும், இம்மாதிரி கீறல்களுடன் கூடிய பானை ஓடுகள், இந்தியாவின் பிற பகுதிகளிலும் தமிழகத்திலும் இலங்கையிலும் கிடைத்திருக்கின்றன. அவற்றில் 75 சதவீதம் தமிழகத்தில்தான் கிடைத்திருக்கிறது. கீழடியில் மட்டுமல்ல, கொற்கை, அழகன் குளம் ஆகிய வற்றிலும் இம்மாதிரி பானை ஓடுகள் கீறல்களுடன் கிடைத்திருக்கின்றன. கீழடியில், தமிழ் பிராமி கிடைத்த படிநிலைக்குக் கீழே இவை கிடைத்திருக்கின்றன. ஆகவே, அவை தமிழ் பிராமிக்கு முந்தைய காலமாக இருக்கலாம். ஆகவே இந்தக் கீறல்கள் மிக முக்கியமானவை.

***கீழடியில் சமய வழிபாடு சார்ந்த பொருட்கள் கிடைக்கவில்லையென ஆய்வறிக்கை கூறுகிறது. ஆகவே அங்கு வாழ்ந்த மக்கள் சமய நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் எனச் சொல்ல முடியுமா?***

அப்படிச் சொல்ல முடியாது. கீழடியில் அகழாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இடம் 110 ஏக்கர். வைகை நதிக்கரையில் இதுபோல 293 இடங்கள் இப்படி அடையாளம் காணப்பட் டுள்ளன. இதில் இதுவரை கீழடியில் மூன்று - நான்கு ஏக்கர்கள்தான் தோண்டப்பட் டிருக்கின்றன. மீதியைத் தோண்டும்போது என்ன கிடைக்குமெனத் தெரியாது. இப்போதுவரை வழிபாட்டுக்கூடம் போன்றவற்றுக்கான ஆதாரம் கிடைக்கவில்லை. ஆனால், இது சங்க காலத்துடன் தொடர்புடைய இடம் என்பதால் இதை எச்சரிக்கை யுடன்தான் அணுக விரும்புவேன். சங்க கால மக்களை வழிபாடு அற்றவர்கள் எனச் சொல்ல முடியாது. சங்க இலக்கியமே, குறிஞ்சி, முல்லை, மருதம் என ஐவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு இடத்திற்கு ஒரு கடவுள் இருந்தார்கள். தவிர, நடந்து செல்லும் பாதையைப் பாதுகாக்கும் தெய்வங்கள், மரத்தில் இருக்கும் தெய்வங்கள், காட்டில் உள்ள தெய்வங்கள் இருந்தன. பெரும்பாலும் தாய்த் தெய்வ வழிபாடு இருந்தது. இதற்கான ஆதாரம் பிறகு கிடைக்கலாம்.

ஆனால், நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இம்மாதிரியான வழிபாடு அந்த சமூகத்தின் மையப்பொருளாக இல்லை என்பதைத்தான். சங்க இலக்கி யத்தை முழுதாகப் படித்துப் பார்த்தால், அந்தக் கால வாழ்க்கை என்பது, Celebration of lifeஆகத்தான் இருந்திருக்கிறது. அந்த இலக்கியம் வாழ்க்கை யைக் கொண்டாடுகிறது. தினசரி வாழ்வைக் கொண்டாடுகிறது. இப்போது கிடை த்திருக்கும் பொருட்கள் அந்த வாழ்வை உறுதிப்படுத்துகின்றன. ஆனால், எதிர்கால அகழாய்வுகள் என்ன சொல்கின்றன என்று பார்க்க வேண்டும்.

***கீழடியில் விளையாட்டுப் பொருட்கள் அதிகம் கிடைத்திருப்பது குறித்து அதிகம் பேசப்படுகிறது. அதில் என்ன முக்கியத்துவம்?***

அதில் இரண்டு மூன்று விஷயங்கள் இருக்கின்றன. அந்த மக்கள் நிலையான வாழ்வை வாழ்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் பொருளாதாரம் உபரிப் பொருளாதாரமாக இருக்க வேண்டும். உள்நாட்டு வணிகம் - வெளிநாட்டு வணிகம் ஆகிய இரண்டுக்கும் கீழடியில் ஆதாரம் கிடைத்திருக்கிறது. ஆகவே, இங்கு வேளாண்மை சார்ந்த, கால்நடை வளர்ப்பு சார்ந்த, வணிகம் சார்ந்த ஒரு பொருளாதாரம் இருந்திருக்க வேண்டும். அதில் உபரி இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். அப்போதுதான் விளையாட்டிற்கு நேரம் கிடைக்கும். அது நாகரிகத்திற்கான முக்கியமான அடையாளம். சிந்துவெளி யிலும் இதுபோல விளையாட்டுப் பொருட்கள் கிடைத்திருக்கின்றன. தவிர, சங்க இலக்கியம் விளையாட்டுகள் குறித்து நிறையப் பேசுகிறது. அதை உறுதிப்படுத்துவது போல இந்தப் பொருட்கள் இருக்கின்றன.

***கீழடி குறித்துப் பேசும்போது ஆதிச்சநல்லூர் பற்றியும்***

4ஆம் பக்கம்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 31.10.2019

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடும் கண்டனம்

# பெரியார் பல்கலைக்கழகப் பட்டமளிப்பில் இந்துத்துவ சின்னங்களை திட்டமிட்டு ஒளிரச் செய்யப்படுவதா?

*அரசியல் சட்ட சாசனத்திற்கு எதிரான இந்த இந்துத்துவ அடையாள திணிப்புகள் தமிழக அரசின் விழாக்களில் திட்டமிட்டு செய்யப்படுமானால் கடுமையான போராட்டங்களை முன்னெடுப்போம் என எச்சரிக்கை!*

பெரியார் பல்கலைக் கழகத்தின் 19ஆவது பட்டமளிப்பு விழா 24.10 2019 அன்று சேலம் பெரியார் பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோகித், தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் கே.பி.அன்பழகன், பல்கலைக் கழக துணைவேந்தர் பொ. குழந்தைவேலு, உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி சதாசிவம் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

பெரியார் பெயரில் இயங்கும் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் அழைப்பிதழில் பெரியாரின் படம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இது தற்செயலாய் நடந்தது அல்ல. இந்துத்துவவாதிகளால் திட்டமிடப்பட்ட கடும் கண்டனத்திற்குரிய செயல் ஆகும்.

இந்நிகழ்வு நடைபெற்ற சேலம் பெரியார் பல்கலைக் கழக வளாகத்தில் ஆளுயர பெரியார் சிலை உள்ளது. இந்த பெரியார் சிலையின் பின்புலத்தில் வண்ண விளக்குகளால் இந்துத்துவ குறியீட்டு சின்னங்களான திரிசூலம், விநாயகர் படம், ஓம் என்கிற சமஸ்கிருத எழுத்து ஆகியவை மாறி மாறி ஒளிரும்படி திட்டமிட்டே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மதசார்பற்ற நாடு என இந்திய அரசியல் சட்ட சாசனம் உறுதியாக அறிவித்துள்ள நிலையில் ஒரு அரசு விழாவில் அதுவும் கல்லூரியில் பார்ப்பன இந்துத்துவ அடையாள சின்னங்களை திட்டமிட்டே அதுவும் காலம் முழுவதும் சனாதன இந்துத்துவத்திற்கு எதிராக, பார்ப்பனர்களால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்துக்கள் என ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட மக்களுக்காக தன் வாழ்நாளெல்லாம் உழைத்த அறிவாசான் பெரியாரின் சிலை பின்புலத்தில் இப்படி இந்துத்துவ அடையாள சின்னங்களை ஒளிரச் செய்வது மாபெரும் அயோக்கியத்தனமாகும்.

இது திட்டமிட்டு நடத்தப்பட்ட செயல். இதன் பின்புலத்தில் இருப்பது பெரியார் பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் பொ. குழந்தைவேலு எனும் இந்துத்துவாதிதான் முதல் காரணம்.

கல்லூரியில் இந்திய அரசியல் சட்டம் சொல்லும் மதசார்பற்ற தன்மையையும், அறிவியல் மனப்பான்மையையும் வளர்க்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பில் இருக்கும் இந்த துணைவேந்தர் பொ. குழந்தைவேலு தன் கடமையில் தவறியதோடு மட்டுமல்லாமல் அரசியல் சட்டத்திற்கு எதிராகவும் நடந்த குற்றத்தை செய்துள்ளார். இவர் தொடர்ந்து பல்கலைக்கழக துணைவேந்தராக நீடிக்கவும் தகுதியற்றவர் ஆவார்.

யார் இந்த துணைவேந்தர் பொ. குழந்தைவேலு?

பெரியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அறையில் பா.ஜ.க.வின் தேசிய செயலாளர் எச்.ராஜா, இவர் இல்லாத போதும்கூட அறையை திறந்து அமர்ந்து பாஜக ஆட்களுடன் சட்ட விரோதமாக மணிக்கணக்கில் உரையாடும் அளவிற்கு இந்துத்துவ ஆர்.எஸ்.எஸ்.சின் கைப்பாவைதான் இந்த பொ. குழந்தைவேலு.

விவேகானந்தர் ரதம் என்ற பெயரில் தமிழ்நாட்டிற்குள் காவிகள் ரத ஊர்வலம் சென்றபோது தன் கல்லூரி மாணவர்களை அந்த இரதத்தை வரவேற்க கட்டாயம் வர வேண்டும் என சுற்றறிக்கை அனுப்பிய இந்துத்துவவாதிதான் இந்த பொ. குழந்தைவேலு.

துணைவேந்தராக பதவியேற்ற பின் துணைவேந்தர் அறைக்குள் சட்டவிரோதமாக சரஸ்வதி படத்தையும், சட்டவிரோதமாக பல்கலைக்கழகத்தின் செலவிலேயே ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜையை கல்லூரிக்குள் திணிப்பவர் தான் இந்த பொ. குழந்தைவேலு.

மு. ராம்குமார் எனும் ஆர்.எஸ்.எஸ் நபர் பெரியார் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் இணை விரிவுரையாளராக இருக்கிறார். இவர் தன் முகநூல் முழுவதும் இந்துத்துவ ஆர்.எஸ்.எஸ். கருத்துக்களை பரப்பி வருபவர் ஆவார். இவர் தான் 24.09.2019 அன்று துணைவேந்தர் இல்லாதபோதும் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அறையில் பா.ஜ.க.வின் தேசிய செயலாளர் எச். ராஜாவை சட்டவிரோதமாக அமர வைத்து ஆலோசனைகளை செய்தார். அதில் எச். ராஜாவுடன் பா.ஜ.க.வினர் 19 பேர், பதிவாளர் (பொறுப்பு) தங்கவேல், தமிழ்த் துறைத் தலைவர் பெரியசாமி, ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதியும் ஆட்சிக் குழு உறுப்பினருமான குமாரசாமி ஆகியோர் ஆலோசனையில் கலந்து கொண்டவர்கள். (காண்க: நாளிதழ் செய்தி) பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொ.குழந்தைவேலு ஆதரவுடன் இந்த சட்டவிரோத செயல்கள் இந்துத்துவ திணிப்புகள் சேலம் பெரியார்பல்கலைக்கழகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறு இந்திய அரசியல் சட்டம் வலியுறுத்தும் மதசார்பற்ற தன்மை, அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல் ஆகியவற்றிற்கு எதிராகவும் சட்டவிரோதமாக நடந்து கொள்ளும் துணைவேந்தர் பொ. குழந்தைவேலு, புவியியல் துறையின் இணை விரிவுரை யாளர் மு.ராம்குமார் எனும் ஆர்.எஸ்.எஸ். நபர் ஆகியோர் தொடர்ந்து இந்த பொறுப்பு களில் நீடிக்கலாமா என்பதை நடுநிலையாளர்களின் சிந்தனைக்கே விடுகிறோம்.

இதில் மிகவும் வெட்கக்கேடான செய்தி இவ்வளவு சட்ட விரோத நிகழ்வுகள் நடக்கும் இடத்தில், பெரியார் சிலையை இந்துத்துவவாதிகள் அவமதிப்பதை பார்த்துக்கொண்டு அண்ணாவின் பெயரால் இயங்கும் அதிமுகவைச் சேர்ந்த தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் இந்துத்துவவாதிகளுடன் இணைந்து கொண்டு தான் ஏற்றுக்கொண்ட பதவி பிரமாண வாக்குறுதியை மீறினார் என்பதாகும். இவர் ஆர்.எஸ்.எஸ் ஊழியரைப் போலவே நீளமான நெற்றி குறியீட்டில் இருப்பதும் மத சார்பற்ற தன்மைக்கு எதிரானது, வெட்கக் கேடானது.

தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக அரசு அலுவலகங்களில் மத சம்பந்தமான படங்களோ, வழிபாடுகளோ நடத்தக்கூடாது என அரசாணை வெளிட்டார் என்பதும் அது இப்போதும் நடைமுறையில் இருக்கிறது என்பதும் தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் அவர்களுக்கு தெரியுமா ? என்று கேட்கிறோம். தமிழக அரசின் அரசாணைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் உள்ள ஒரு அமைச்சரே இந்த அரசாணைக்கு எதிரான செயல்களுக்கு துணைப் போவது மிகவும் கண்டிக்கத்தக்கது. தேவைப்பட்டால் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அரசாணையை தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் தயாராக உள்ளோம். அமைச்சர் அவர்கள் அதனை படித்து தெளிய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்

சேலம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பொ. குழந்தைவேலு, புவியியல் துறையின் இணை விரிவுரையாளர் ஆர்.எஸ்.எஸ். நபர் மு. ராம்குமார் கும்பலின் இந்த சட்டவிரோத செயல்களை நாம் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. இவர்களின் இந்த அடாவடிப் போக்குக்கு எதிராக பல்கலைக் கழகத்தின் மாணவர் அமைப்புகள், ஒத்த கருத்துள்ள மதசார்பற்ற முற்போக்கு சக்திகளை இணைத்துக் கொண்டு கடும் போராட்டங்களை முன்னெடுப்போம் என எச்சரிக்கிறோம்.

ஏற்கனவே இருந்த துணைவேந்தர் சேதுராமலிங்கம் என்பவர் வாஸ்துபடி துணைவேந்தர் அறையை மாற்றி அமைத்தபோதும், யாகங்கள் வளர்த்த போதும் அதனைக் கண்டித்து போராட்டங்கள் நடத்தினோம். பல்கலைக் கழகத்தின் எதிரிலேயே என் தலைமையில் மூத்த பெரியார் தொண்டர் திருவாரூர் தங்கராசு கலந்து கொண்ட “யாக மோசடி விளக்கப் பொதுக்கூட்டம்” நடத்தினோம் என்பதை நினைவூட்டுகிறோம். இந்த சேதுராமலிங்கம், மருமகளை கொடுமைப்படுத்திய வழக்கில் சிறையில் இருந்த குற்றவாளியும் ஆவார்.

விவேகானந்தர் இரத யாத்திரையில் இப்போதைய துணைவேந்தர் பொ. குழந்தைவேலு மாணவர்களை கலந்து கொள்ள கட்டாயப்படுத்தி சுற்றறிக்கை அனுப்பியதை கண்டித்தும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கடும் போராட்டங்களை முன்னெடுத்தோம் என்பதையும் நினைவூட்டுகிறோம்.

தமிழக அரசு உடனடியாக பெரியார் பல்கலைக் கழக துணைவேந்தரின் இப்போக்கில் தலையிட்டு தடுத்து நிறுத்தி இந்த குறிப்பிட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், அரசு விழாக்களில் இதுபோன்ற திட்டமிட்ட இந்துத்துவ திணிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம்.

**கொளத்தூர் மணி**
தலைவர்

## நீலச் சட்டைப் பேரணி டிசம்பர் 22ஆம் தேதி மாற்றம்

*கோவையில், புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி, பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பால் ஒருங்கிணைக்க உள்ள நீலச்சட்டைப் பேரணிக்கும், சாதி ஒழிப்பு மாநாட்டுக்கும் அழைக்கப்படும் தலைவர்களின் நாள் ஒதுக்கல் போன்ற சில காரணங்களால், கோவை நீலச்சட்டைப் பேரணி டிசம்பர் 22ஆம் நாள் என இறுதி செய்யப்பட்டுள்ளது.*

*அனைவரும் 2019, டிசம்பர் 22 என மாற்றிப் பதிவிடுமாறும், பயண ஏற்பாடுகளை மாற்றியமைத்துக் கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*குறிப்பிடப்படுகிறது. அந்த இடம் தொல்லியல் ரீதியில் எவ்வளவு முக்கியமான இடம்?*

*அலெக்ஸாண்டர் ரீ முதன் முதலில் 1904ல் ஆதிச்சநல்லூரில் அகழாய்வைத் துவங்கியபோது, சிந்துச்சமவெளியே கண்டறியப்படவில்லை. 1920களில்தான் சிந்துவெளியில் ஆர்.டி. பேனர்ஜி, எம்.எஸ். வாட்ஸ் ஆகியோர் அகழாய்வில் ஈடுபட்ட பிறகு, சர் ஜான் மார்ஷல் சிந்துவெளி குறித்த ஒரு அறிக்கையை கொண்டுவருகிறார். அலெக்ஸாண்டர் ரீ அந்த காலகட்டத்தில் அதை ஒரு புதைமேடாகத்தான் பார்த்தார். அதாவது, இறந்தவர்களைப் புதைப்பதற்கான ஒரு இடமாகப் பார்த்தார். ஆனால், அப்போதே அவர் 30 இடங்களில் இங்கு அகழாய்வு மேற்கொள்ள முடியுமென கண்டறிந்தார்.ஆனால், அதற்குப் பிறகு 100 வருடம் அங்கு ஏதும் ஆய்வுகள் செய்யப்படவில்லை என்பது ஆச்சரியகரமானது. 2004ல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், ஆய்வு முடிவு தற்போதுவரை வெளியாகவில்லை. ஆனால், கீழடி, ஆதிச்சநல்லூர் ஆகியவற்றைத் தனித்தனியாகப் பார்க்க வேண்டியதில்லை. தமிழகத்தில் உள்ள பல நதிக்கரைகளில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. தமிழக அரசைப் பொறுத்தவரை ஆதிச்சநல்லூரிலும் ஆய்வுகள் நடக்குமெனச் சொல்லியிருக்கிறார்கள். அது மகிழ்ச்சியளிக்கிறது.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 1st November 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN